# ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும்

1



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

## சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து



**ஒருக்கால் இன்றைக்கு அவள் அரை நிர்வாணியாய் தெருவில் உடலை நெளித்து நடந்து சென்று நாட்டில் உள்ள எல்லா மதுக்கடைகள் அனுப்புவதைக் காட்டிலும் அதிக ஆத்துமாக்களை நரகத்துக்கு அனுப்பக் கூடும்.**

# மத்தேயு 5:27-28

**27.** விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

**28.** நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ் செய்தாயிற்று.



**இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:**

---

# செய்தி: 60-10-02 இனத்தான் மீட்பர்

---

45. நேற்று காலை நாங்கள் படுக்கையை விட்டு எழுந்திருக்க தாமதமாயிற்று. பிள்ளைகளுக்கு நேற்று பள்ளிக்கூடம் இல்லை. நாங்கள் வெவ்வேறு காரியங்களைக் குறித்து பேசிக் கொண்டிருந்தோம். அவைகளில் ஒன்று... "வெறுப்பு என்பது என்ன? "

46. நான் வெறுப்பு என்பதற்கு ஒரு தொடக்கம் உண்டு, எனவே அதற்கு ஒரு முடிவு இருக்க வேண்டும். ஆனால் அன்புக்கோ தொடக்கம் இல்லை, எனவே அதற்கு முடிவும் இல்லை. வெறுப்பு காலாகாலங்களில் இருக்க வகையுண்டு.

ஆனால் அன்பு நித்தியமானது. வெறுப்பு தொடங்கி முடிவு பெறுகிறது. அன்புக்கு தொடக்கம் இல்லாததால் அது முடிவு பெறுவதில்லை” என்றேன். பாருங்கள்? அது நித்தியமானது.

47. ஒரு ஆண் அழகுக்காக ஒரு பெண்ணை மணக்கும்போது, அதற்கு ஒரு முடிவு இருக்கும். ஆனால் அவன் தன்னை அறியாமலேயே ஒருத்தியிடம் அன்புக் கொள்ளும்போது, அதே போன்று அவளும், அவனுடைய தோற்றம் எப்படியிருந்தாலும், அவனிடம் அன்பு கொள்ளும் போது, அவன் அவள் மீது அன்பு கொள்கிறான், அவளும் அவன் மீது அன்பு கொள்கிறாள். அது மகிமையில் நித்திய துணைவன் அல்லது துணைவியாக இருக்கும்.... மரணமோ அல்லது வேறெதுவும் அவர்களைப் பிரிக்க முடியாது. ஏனெனில் அவர்கள் நித்தியத்திலிருந்து வந்தவர்கள். அவர்கள் காலம் என்பதற்குள் காலடி வைத்து, மறுபடியும் நித்தியத்திற்கே

திரும்பிச் சென்று விடுகின்றனர். நித்தியம் என்பது காலம் என்னும் சரீரத்தில் கீழே விழுந்து, மறுபடியும் மேலே நித்தியத்துக்கு சென்றுவிடுகிறது. அது ஒருக்காலும் அழியாது.

48. ஒரு அழகுள்ள ஸ்திரீ, அந்த அழகு நிச்சயமாக குறைந்து விடும். நீங்கள் அதற்கு சில ஆண்டுகள் அளிக்கலாம். ஒருக்கால் இன்றைக்கு அவள் அரை நிர்வாணியாய் தெருவில் உடலை நெளித்து நடந்து சென்று நாட்டில் உள்ள எல்லா மதுக்கடைகள் அனுப்புவதைக் காட்டிலும் அதிக ஆத்துமாக்களை நரகத்துக்கு அனுப்பக் கூடும். அவள் அப்படி உடலை நெளித்து நடக்கும்போது தான் யாரோ என்னும் உணர்வு அவளுக்கு இருக்கக்கூடும்... "அவர்கள் கழுத்தை நெறித்து நடந்து, ஒய்யாரமாய் நடப்பார் கள்" என்று வேதம் கூறுகிறது. (ஏசா.3:16) வேத வசனங்களை நிறைவேற்றிக் கொண்டு, அதே சமயத்தில் அதை

அறியாதிருக்கிறார்கள். அவர்கள் சீர்கேடான உடைகளை அணிந்து முற்றத்தில் நின்று கொண்டிருப்பார்கள். மனிதர் அவளை உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பர். அதை அவர்கள் அறியா திருப்பர். அவள் தன் புருஷனுக்கோ அல்லது தன் சிநேகித பையனுக்கு (boy friend) மிகவும் உத்தமியாக- கற்புள்ளவ ளாக இருந்திருக்கலாம். ஆனால் நியாயத் தீர்ப்பின் நாளில், நூற்றுக்கணக்கான ஆண் களுடன் அவள் விபச்சாரம் செய்ததற்கு பதில் சொல்லியாக வேண்டும். அவர்கள் மேல் ஒரு ஆவி தங்கியுள்ளதை அவர்கள் அறியாமலிருக்கிறார்கள். "நிர்வாணியும், குருடாயும் இருப்பதை அறியாமலிருக் கிறாய்" என்று வேதம் கூறுகிறது. பரிதாபமான பாகம் என்னவெனில், அதை அறியாமலிருப்பதே.

49. தேவன் அந்த பெண்ணுக்கு அளித்த அழகிய உருவம் கொண்ட அந்த

உடல், அடுத்த ஞாயிறுக்குள் அழுகிப் போக வகையுண்டு என்று உங்களுக்குத் தெரியுமா? உயரமான, கறுத்த, அழகிய தேகக்கட்டு கொண்ட மனிதன் அடுத்த ஞாயிறுக்குள் குப்பை கூளமாக ஆக வகையுண்டு. இவையனைத்தும் அழிந்து போகும்.

ஆனால் உள்ளே இருக்கின்ற அது, தேவன் - அன்பு, நித்திய காலமாய் வாழ்கின்றது. எனவே உள்ளேயுள்ளதன் பேரில் கவனம் செலுத்துங்கள். அந்த நோக்கத்தின் மேல் உங்கள் கண்களை வையுங்கள்.



# விபசாரஞ் செய்த குற்றத்திற்காக பாவி பதில் சொல்ல வேண்டிய நேரத்தில், உண்மையில் குற்றவாளி யார்? தன்னை அவ்வகையில் காண்பித்த அந்த ஸ்திரீயே



சகோ.வில்லியம் பிரன்ஹாம்
அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# மத்தேயு 5:27-28

**27. விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.**

**28. நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ் செய்தாயிற்று.**



இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:

---

## செய்தி: 60-0911E ஜீவனுள்ள தேவனுடைய உண்மையான சபையின் ஐந்து உறுதியான அடையாளங்கள்

---

13. இது எடுத்துக்கூற தகுதி வாய்ந்தது. சில மாதங்களுக்கு முன்பு நானும் மனைவியும் அங்காடிக்கு சென்று கொண்டிருந்தோம்.

அப்பொழுது நாங்கள் விசித்திரமான ஒன்றைக் கண்டோம். அதாவது தெருவில் சென்று கொண்டிருந்த ஒரு ஸ்தீரி பாவாடை அணிந்திருந்தாள்.

சரி, நீங்கள் நம்பமாட்டீர்கள், ஆனால் நாங்கள் உண்மையில் ஒருத்தியைக் கண்டோம்.

என் மனைவி என்னிடம் அதைப் பாருங்கள்'' என்றாள்.

நான், ''அவள் ஒரு கிறிஸ்தவளா யிருக்க வேண்டும். அவள் மிகவும் வித்தியாசமானவளாயிருக்கிறாள்'' என்றேன். அது பெருத்த அவமானம்.

அப்பொழுது என் மனைவியிடமிருந்து இக்கேள்வி எழுந்தது. அவள், ''ஏன், பில், கிறிஸ்தவர்களாகிய நாம் நமது பெண்கள் இவ்விதம் ஆடை அணிந்து நடந்து கொள்ள வேண்டுமென்று வலியுறுத்து கிறோம்? மற்ற சபைகளிலுள்ள மக்கள் இத்தகைய ஒழுக்கங்கெட்ட ஆடைகளை அணியக் காரணம் என்ன? அவர்கள் ஒழுக்கங்கெட்டவர்கள் என்று நீங்கள் கூறமாட்டீர்கள் அல்லவா?'' என்று கேட்டாள்.

நான், ''அது உண்மை தான். நான் யாரையும் நியாயந்தீர்க்க முடியாது. ஆனால் அவர்களைக் காணும் போது,

அவர்களுடைய கனிகளினால் அவர்கள் அறியப்படுகின்றனர். அவர்கள் உண்மை யில் இந்த குற்றத்தை செய்யாமல் இருக்கலாம். ஆனால் அவர்கள் மேல் ஒரு ஆவி தங்கியுள்ளது. அது இவர்களை ஒழுக்கங்கெட்ட தன்மைக்கு விரட்டுகிறது" என்றேன்.

14. **இயேசு, "ஒரு ஸ்திரீயை இச்சை யோடு பார்க்கிற எவனும் தன் இருதயத் தில் அவளோடே விபசாரஞ் செய்தாயிற்று என்றார்.**

**விபசாரஞ் செய்த குற்றத்திற்காக பாவி பதில் சொல்ல வேண்டிய நேரத்தில், உண்மையில் குற்றவாளி யார்? தன்னை அவ்வகையில் காண்பித்த அந்த ஸ்திரீயே.**

**கற்பைப் பொறுத்த வரையில் நீங்கள் லீலிப்புஷ்பத்தைப் போல் தூய்மையாக இருக்கலாம். ஆனால் நீங்கள் ஒழுக்கங் கெட்ட வழியில் உங்களை ஜனங்களுக்கு முன்பாக காண்பிக்கும் போது, நீங்கள்**

உடலுறவு செயலில் ஈடுபடாமலிருந்தாலும், ஒரு மனிதன் உங்களைக் குறித்து பொல்லாத நினைவுகள் கொள்வதற்கு நீங்கள் காரணமாயிருந்தீர்கள், ஆகையால் தவறு உங்களுடையதே.

**“நீங்கள் விபசாரக் குற்றத்தை புரிந்த வராவீர்கள்” என்று இயேசு கூறினார்.**

விபசாரக்காரி பரலோக ராஜ்யத்தில் பிரேவசிக்க மாட்டாள்.




சகோ.
வில்லியம்
பிரன்ஹாம்
அவர்கள்
பேசிய
செய்தியி
லிருந்து
விபச்சாரம் செய்த
குற்றத்துக்காக அவள்
நியாயத்தீர்ப்பின் நாளில் பதில்
சொல்லியாக வேண்டும்

# மத்தேயு 5:27-28

**27.** விபசாரஞ் செய்யாதிருப்பாயாக
என்பது பூர்வத்தாருக்கு
உரைக்கப்பட்டதென்று
கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

**28.** நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்;
ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற
எவனும் தன் இருதயத்தில் அவளோடே
விபசாரஞ் செய்தாயிற்று.



**இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:**

---

## செய்தி: 60-1218 விளங்காத சத்தம்

---

90. அழகான பதினாறு வயது பெண்ஒருத்தி மெல்லும் பசையை மென்று சபையில் உட்கார்ந்து கொண்டு, பிறகு வெளியே சென்று, கவர்ச்சியாக காணப்பட உடைகளை மேலே இழுத்து விட்டு, நெளிந்து கொண்டு நடப்பதைக் காண் கிறோம்.

ஆனால் சில நாட்கள் கழித்து அவளுக்கு வயதாகி முகத்தில் சுருக்கம் விழுகின்றது.

அவள் நெளிந்து நடந்த அந்த உடல்; அதற்குள் ஒரு ஆவி ஆதிக்கம் செலுத்த அவள் அனுமதித்து அவளுடைய

நல்லொழுக்கத்தை நாய்களுக்கு வீசி எறிந்தாள்.

விபச்சாரம் செய்த குற்றத்துக்காக அவள் நியாயத்தீர்ப்பின் நாளில் பதில் சொல்லியாக வேண்டும்.

"ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரஞ் செய்தாயிற்று. அவள் மண் என்றும், அவள் மண்ணுக்குத் திரும்ப வேண்டும் என்பதையும் உணராமலிருக் கிறாள். ''நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்.''

அது என்ன? அவள் மாத்திரம் அதை உணர்ந்து அவள் செய்வதை நிறுத்தி விடுவாளானால் அது விளங்காத சத்தம். ''நல்லது, தொலைகாட்சியில் இன்னார் இன்னார், பள்ளியில் இன்னார் இன்னார். ''உங்கள் பள்ளியில் உள்ளவர்களைப் போல நீங்கள் நடந்து கொள்ளாதீர்கள். அது உங்களுக்கு மாதிரியாக அமைய

வேண்டாம். தேவனை நோக்கிப் பாருங்கள்!



# பெண் பிள்ளைகளுக்கு சவுக்கடி அவசியமல்ல, அதை அனுமதிக்கும் தந்தைக்கும் தாய்க்குமே அது அவசியம்



சகோ.வில்லியம் பிரன்ஹாம்
அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# மத்தேயு 5:27-28

27. விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

28. நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ் செய்தாயிற்று.



**இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசி யாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:**

---

## செய்தி: 62-0603 கடைசிக் கால சுவிசேஷபணி

---

45. வெள்ளத்தினால் அழிவு ஏற்படுவதற்கு முன்பு, அவர்களுக்கு இன்று நமக்குள்ள நாகரீகத்தைக் காட்டிலும் சிறந்த நாகரீகம் இருந்ததாக நாம் காண்கிறோம். அவர்கள் அணுசக்தியை தங்கள் கட்டுக் குள் கொண்டிருந்தனர் என்று நினைக்கி றேன். அதுதான் உலகத்தை தன் சுழற் பாதையிலிருந்து அசைத்து மாற்றியிருக்க வேண்டுமென்று எண்ணுகிறேன். நான் பிரிட்டனிலுள்ள பனிக்கட்டி வயல்களில் நின்று கொண்டு, ஐந்நூறு அடி ஆழம் தோண்டி, அடியிலிருந்து செடிகளை எடுப்பதை கண்டிருக்கிறேன். அநேக

நூற்றாண்டுகளுக்கு முன்பு அங்கு இந்த செடிகள் வளர்ந்தன. உலகம் ஒரு காலத்தில் நேராக நின்றது என்று நாம் கற்பிக்கப் பட்டிருக்கிறோம், அறிந்திருக்கிறோம். அவர்கள் பொறியியலிலும் விஞ்ஞானத் திலும் சிறந்து விளங்கினர். அவர்கள் கூர்நுனிக் கோபுரம், சிங்க உடலும் ஸ்திரீயின் முகமும் இறக்கைகளும் கொண்ட சிலைகள் (sphinx) ஆகியவை களை உருவாக்கும் திறன் படைத்தவர்களா யிருந்தனர். இன்று நம்மால் அவைகளை உருவாக்க முடியவில்லை. அந்த பளுவுள்ள கற்களை உயர கொண்டு செல்வதற்கு நம்மிடம் இயந்திரங்கள் கிடையாது. அது அணு சக்தியினால் தான் இயங்கியிருக்க வேண்டும். அதற்கு பெட்ரோல் சக்தி போதாது. மின்சார சக்தி போதாது, நம்முடைய காலத்தைக் காட்டிலும் அதிக புத்தி கூர்மை கொண்ட வேறொரு காலம் அது.

46. அந்த காலத்தில் தேவன் நோவா என்னும் பெயர் கொண்டவனை அழைத்தார். அவன் ஒரு சாதாரண மனிதன். விவசாயி. அவனுடைய சந்ததியில் அவன் தேவ பக்தியாயிருந்த காரணத்தால் அவன் அழைக்கப்பட்டான் ''பேழையை உண்டாக்கு" என்னும் அந்த விஷயத்தில் தேவன் அந்த ஒரே மனிதனுடன் தொடர்பு கொண்டார். ஏனெனில் அக்காலத்தில் பாவம் பெருகினதை நாம் காண்கிறோம். "தேவகுமாரர்கள் மனுஷ குமாரத்திகளைக் கண்டார்கள்" என்று வேதம் கூறுகின்றது. அதைக் குறித்து விவாதிக்கும் போது, விழுந்து போன தேவதூதர்கள் மாம்சத்தில் தேவகுமாரர்களாக தோன்றினதாக பல எழுத்தாளர்கள் கருதுகின்றனர். அவர்கள் எப்படி அவ்வாறு கருத முடியுமென்று எனக்குப் புரியவில்லை. அது சாத்தானை சிருஷ்டிகனாகச் செய்துவிடும். சாத்தான் சிருஷ்டிகன் அல்ல, அவன் சிருஷ்டிப்பை

கெடுப்பவன் (Perverter), பாருங்கள். பொய் என்பது உண்மையை மாற்றிக் கூறுதலாம். விபச்சாரம் என்பது சரியான செயலை தவறான விதத்தில் புரிதல். பாருங்கள். பாவம் என்பது அதேதான் சாத்தானால் சிருஷ்டிக்க முடியாது. ஏற்கனவே சிருஷ்டிக்கப்பட்டதை அவன் கெடுக்க முடியும். எனவே தேவகுமாரர்கள் என்பவர்கள் தேவனுடைய வம்சத்தில் ஆதாமின் வழியாக வந்த சேத்தின் புத்திரர்; மனுஷ குமாரத்திகள் சாத்தானின் வழியாக வந்த காயீனின் புதல்விகள். “அவர்கள் அதிக சௌந்தரியமுள்ளவர்களென்று கண்டு”.

47. இங்கு நாம் கவனிக்கிறோம். நூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பெண் களின் புகைப்படங்களைக் காணும் போது இப்பொழுது காணப்படும் பெண்களின் அழகு, முன்பிருந்த பெண்களின் அழகை எவ்வளவோ மிஞ்சிவிட்டது, நீங்கள்

ஆதியாகமம் 6ம் அதிகாரத்தைப் படிப்பீர்களானால், அதைக் குறித்த ஒரு அழகான வர்ணனையை காணலாம். அவர்கள் சௌந்தரியமுள்ளவர்களாயிருந்தனர். அதற்கு காரணம், அவர்களுடைய உடைகளும், நவீன போக்குமே. அது தான் அவர்களுடைய அழகை எடுத்துக் காண்பிக்கின்றது. என்னிடம் பெர்ல் வைட் (Pearl White) என்பவளின் புகைப்படம் ஒன்றுள்ளது. அவளுடைய இரகசிய காதலன் ஸ்காட் ஜாக்சன் என்பவன், அவளுடைய மார்பில் கத்தியைப் பாய்ச்சி அவளைக் கொன்று போட்டான். அப்பொழுது இந்த மகத்தான தேசம் அதிர்ச்சியுற்று, பெர்ல் வைட்டின் பாடலைப் பாடியது. அவள் அக்காலத்திலே உலகிலேயே தலைசிறந்த அழகி என்று கருதப்பட்டாள். ஆனால் இன்று தெருவில் செல்லும் சில பெண்களுடன் அவளை ஒப்பிட்டால், அவள் ஒன்றுமேயில்லை.

48. அல்லது க்ளாரா போ (Clara Bowe) என்பவளின் காலத்திற்கு சென்று பாருங்கள். அவள் தான் முதன் முதலாக தன் காலுறைகளை (Stockings) முழங்காலுக்கு கீழே சுருட்டி விட்டு “சுருட்டி விடுங்கள், பெண்களே, சுருட்டி விடுங்கள்'' என்று கூறி அவதூறை உண்டாக்கினாள். நான் சிறுவனாயிருந்த போது நடந்த அந்த சம்பவம் எனக்கு ஞாபகமுள்ளது. க்ளாரா போவின் புகைப் படத்தை இன்றைய அழகிகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். பார்த்தீர்களா? அது முடிவு காலத்தின் அடையாளமாயுள்ளது. “நோவாவின் நாட்களில் நடந்தது போல, மனுஷகுமாரன் வரும் நாட்களிலும் நடக்கும்'' என்று இயேசு கூறினார். அவர்கள் படிப்படியாக ஆடைகளை குறைத்துக் கொண்டே வந்தனர், அது என்ன? காயீனின் புதல்விகள். ஆகையால் தான் நாம், அதைக் குறித்த சுவிசேஷ சத்தியத்தை எடுத்துக் கூறும்போது, பைத்தியக்காரர்

களாகவும் மூடபக்தி வைராக்கிய முள்ளவர்களாகவும் கருதப்படுகிறோம். அவர்கள் தொடர்ச்சியாக கெட்ட நடத்தையில் ஈடுபட்டு, தெருக்களில் இப்பொழுது நடந்து கொள்ளும் விதமாக நடந்து கொள்ளுகின்றனர். நியாயத்தீர்ப் பின் நாளிலே இதற்கு அவர்கள் பதில் சொல்லியாக வேண்டும் என்பதை உணராமலிருக்கின்றனர். ஒரு ஸ்திரீ பாலுணர்ச்சியை தூண்டும் அளவுக்கு தவறாக உடுத்துவாளானால்; நீங்கள் உங்கள் கணவருக்கு, அல்லது உங்கள் மனதுக்கு இனியவனான பையன் நண்ப னுக்கு (boy friend) லீலிப் புஷ்பத்தைப் போல் தூய்மையாக இருக்கலாம். ஆனால் தெருவில் செல்லும் ஒரு பாவி, நீங்கள் உடுத்தியுள்ள நிலையில் உங்களைக் காணும் போது, உங்களை இச்சிப்பான். ஏனெனில் உங்களை அந்த விதத்தில் நீங்கள் காண்பித்தீர்கள்.

49. பெண் பிள்ளைகளுக்கு சவுக்கடி அவசியமல்ல, அதை அனுமதிக்கும் தந்தைக்கும் தாய்க்குமே அது அவசியம். இது இளைஞனின் நெறி தவறுதல் (Juvenile delinquency) அல்ல, பெற்றோரின் நெறி தவறுதல் (parent delinquency) அது அநேகமாக பிரசங்க பீட நெறி தவறுதல் (pulpit delinquency) என்று கருதுகிறேன். ஏனெனில் தேவனுடைய வார்த்தை அதற்கு கண்டனம் தெரிவிக்கும் போது, அவர்கள் அதைக் குறித்து ஒன்றுமே கூறாமல், அவர்கள் அவ்வாறு செய்ய விட்டுவிடுகின்றனர். "ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரஞ் செய்தாயிற்று" (இறந்த காலம்) என்று வேதம் கூறுகின்றது (மத் 5:28). ஒரு பாவி விபச்சாரம் செய்த குற்றத்துக்கு பதிலுரைக்க நியாயாசனத்துக்கு செல்லும் போது, "யாருடன் விபச்சாரம் செய்தாய்?" என்னும் கேள்வி கேட்கப்படும்.

உங்களுடன் நீங்கள் அந்த செயலைப் புரியாமல் போனாலும், நீங்கள் குற்றவாளி யென்று வேதம் தீர்க்கின்றது. அப்படி யானால் அதற்கு யார் பொறுப்பு? ''ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரஞ் செய்தாயிற்று". அதன் வினை!

50. இன்று ஜெபர்ஸன்வில்லிலுள்ள பெண்களில் 99.9 சத விகிதம் பெண்கள் தேவனுக்கு முன்பாக குற்றவாளிகளாயுள் ளனர். முழு தேசமும் அந்நிலையில் தான் உள்ளது. ஏன்? ஜனங்களிடம் அதை எடுத்துக் கூறாமல், பிரசங்க பீடத்தில் கடமை தவறுதல். வீடுகளிலும் கடமை தவறி, வாலிபப் பெண்கள் அவ்வாறு தெருக்களில் நடந்து கொள்ள அனுமதித்தல், அவர்கள் ''அதனால் பரவாயில்லை" என்கின்றனர். இதே நிலையைத் தான் நோவா தன் காலத்தில் சந்திக்க வேண்டியவனாயிருந்தான். மனுஷ குமாரத்திகள் சௌந்தரியமுள்ளவர்களாய்

இருந்தனர். தேவகுமாரர்கள் அவர்களைக் கண்டனர். பாருங்கள், இச்சை உண்டாகுகின்றது. ஆனால் நோவாவோ ஓ, அதைக் குறித்து மணிக்கணக்காக பிரசங்கம் செய்யலாம். நோவா நீதிமானும் தேவ பக்தியுள்ளவனும், நேர்மையுள்ள வனுமாயிருந்தான். அவன் இதற்கு விரோதமாக கூக்குரலிட்டான். அவர்கள் அவனை பைத்தியக்காரன் என்றழைத்தனர் பரியாசக்காரர்கள். அவர்கள் அவனைப் பரியாசம் செய்ததாக வேதம் கூறுகின்றது, ஆனால் அவனோ, ''புயல் அடித்து, தண்ணீர் வானத்திலிருந்து பொழியப் போகும் நாள் வரப் போகின்றது'', என்று எச்சரித்து வந்தான். அங்கு மழை நீர் இல்லை. அவனுடைய சுவிசேஷம் அக்காலத்து விஞ்ஞானத் தத்துவங்களுக்கு முன்பாக நிற்க முடியவில்லை. ஏனெனில் வானத்தில் மழை நீரே இல்லை.



ஒரு ஸ்திரீயைப் பாருங்கள், ஒரு கிறிஸ்தவளாய் எண்ணப்பட வேண்டியவள் அங்கே கடற்கரையின்மேல் கலப்புக் குளியலில், ஒரு குளியலாடையோடு நீட்டிப் படுத்துக் கிடக்கிறாள்

சகோ. வில்லியம் பிரன்ஹாம்



# மத்தேயு 5:27-28

**27.** விபசாரஞ் செய்யாதிருப்பாயாக
என்பது பூர்வத்தாருக்கு
உரைக்கப்பட்டதென்று
கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

**28.** நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்;
ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற
எவனும் தன் இருதயத்தில் அவளோடே
விபசாரஞ் செய்தாயிற்று.



**இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசி யாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:**

---

## செய்தி: 62-0121E – ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம்

---

167 இப்பொழுது... அவர்கள் எஸ்தரை... அவர்கள் தங்களை எல்லா விதத்திலும் அலங்கரித்து ஆயத்தப்படுத்தி இராஜாவுக்கு முன்பாகத் தங்களை காண் பிக்கும்படியாக அந்த இடங்களில் ஒன்றில் நிறுத்தினர் என்பதை நாம் கண்டறிகிறோம். என்னே! அவளோ அதற்கு மறுத்து விட்டாள். அவள் அதை விரும்பவில்லை. அவள் இருந்தவிதமாகவே செல்ல விரும்பினாள். ஆமென்.

168 நாமோ இன்றைக்கு உலகத்தைப் போன்றே நடந்து கொள்ள விரும்புகிற சபைகளையே பெற்றுள்ளோம்,

ஏனென்றால் நாம் பெரிதாகிவிட்டோம். தேவனோ, "ஒரு சமயம் அது சிறிதாயிருந்தபோது, அவர்கள் அவரை சேவித்தனர். ஆனால் அது பெருகிவிட்டபோதோ, அவர்கள் அவரை மறந்துவிட்டனர்" என்று கூறினார். அது உண்மை.

169 நாம் இங்கு எங்கோ உள்ள தெருச் சந்தில் கீழே கிடந்த தகரத் தட்டினை எடுத்து முரசாக வைத்துக்கொண்டு, நம்முடைய கரங்களில் அதை தட்டிக் கொண்டும், பழைய நரம்பிசைக் கருவி வாத்தியத்தை இசைத்துக்கொண்டும் ஒரு தெருக் கூட்டத்தை நடத்திக் கொண்டிருந்தோம். அப்பொழுது நீங்கள் தாழ்மையாய் இருந்தீர்கள். ஆனால் நாம் முப்பது அல்லது நாற்பது மில்லியன் டாலர் பெறுமானமுள்ள கட்டிடங்களையும், அது போன்ற மகத்தான காரியங்களையும் பெற்றுக்கொண்டபோது, நாம் அதன் பின்னர் மிகுந்த கர்வமடைந்து, நாம் அதைக் குறித்தே மறந்துபோய்,

உலகத்தோடு மெருகேற்றிக்கொள்கிறோம், அது உண்மை.

170 அன்றொரு நாள் நான் ஓர் இடத்தில் இருந்தேன். அங்கு இருந்த புனிதத்தன்மை என்ற ஸ்தாபன சகோதர னுக்காக ஒரு கூட்ட ஜனங்கள் பணிபுரிந்து கொண்டிருந்தனர். அங்கே இருந்த ஒவ்வொரு ஸ்திரீயும் காஃபி பருகும் இடைவேளை நேரத்தில் காஃபி பருக வரும்போது, அவர்கள் ஒவ்வொருவரும் குட்டையான தலைமுடியை வெட்டிக் கொண்டிருந்தவர்களாயும், உதட்டுச்சாயம் பூசிக்கொண்டிருந்தவர்களாகவுமே காணப் பட்டனர். இப்பொழுது நீங்களோ, "சகோதரன் பிரான்ஹாமே, அதைக் கூறுவது உங்களுடைய வேலை அல்ல" என்று கூறலாம். அதைக் கூற எனக்கு உரிமை உண்டு. வேதம் அதைக் கூறுகிறது. அது உண்மை.

171 ஏராளமான பெந்தேகோஸ்தே ஸ்திரீகள் ஒரு புருஷனுடையதாய் காணப் படுகிற உடைகளை உடுத்திக் கொள்கி றார்கள். அதுவோ தேவனுடையப் பார்வையில் அருவருப்பாயுள்ளது என்று அவர் கூறியுள்ளார். அது உண்மை. நீங்கள் அந்தவிதமாக இருந்துகொண்டு எப்படிப் பரலோகம் செல்ல எதிர்பார்க்க முடியும்? பரிசுத்த ஆவியானது அங்கு இருக்க வில்லை என்பதையே அது காண்பிக்கிறது. பரிசுத்த ஆவியானவர் அங்கு இருந்திருப் பாரேயானால், அப்பொழுது அவர் கடிந்து கொண்டிருந்திருப்பார். உண்மை. ஓ, நீங்கள் சத்தமிடலாம், அந்நிய பாஷையில் பேசலாம், மேலும் கீழும் ஓடலாம், ஆவி யில் நடனமாடலாம். நான் இந்துக்கள், இந்தியர்கள் இன்னும் மற்றவர்கள் அதைச் செய்வதைக் கண்டிருக்கிறேன். உங்களை ஜீவிக்கிற தேவபக்தியுள்ள ஜனங்களாக ஆக்குவதற்கு பரிசுத்த ஆவியின் வல்லமை யும், நீங்கள் பேசிக்கொண்டிருக்கிறதை

ஆதரிக்க கூடிய ஒரு ஜீவியமும் இருந்தாலொழிய அது ஒருகாரியத்தையும் பொருட்படுத்துகிறதில்லை.
அவ்வாறிப்பதே கிறிஸ்துவின் மணவாட்டி யாயுள்ளது.

172 எஸ்தர் ஒரு மணவாட்டியாய் மாறுவதற்கிருந்தாள், ஆயினும் அவள் உலகத்தின் எந்த அலங்கரிப்பையும் விரும்பவில்லை. அவள் இருந்தபிரகார மாகவே இராஜாவுக்கு முன்பாகச் செல்ல விரும்பினாள். அவள் பெந்தேகோஸ்தே ஸ்திரீகள் இருக்க வேண்டிய பிரகாரமாக ஒரு சாந்தமுள்ளத் தாழ்மையான ஆவியி னால் தன்னை அலங்கரித்துக்கொண்டாள். இவர்கள் எல்லோருமே மனம்போன போக்கில் மயக்கும் விதத்தில் தங்க ளுடைய விறுவிறுப்பான ஆடல் இசை வகையிலான புதிய அலங்காரத்தோடு முதன்மையான பெண்களாய் இராஜா விற்கு முன்வந்தபோது, அவனோ அவர் களைப் பார்த்துவிட்டு, அவர்களை

மறுமனையாட்டிகளோடு ஓர் அறையில் அடைத்து வைத்தான். ஆனால் இந்த எஸ்தர் அவனுடையப் பார்வையில் தோன்றினவுடனே, அவன் அந்த இனிமையான, தாழ்மையான சாந்தமான ஆவியின் கணநேரக் காட்சியைக் கண்ட மாத்திரத்தில், அவன், "அதற்குரியவள் அவள்தான். எனவே போய் அந்தக் கிரீடத்தைக் கொண்டுவந்து, அதை அவ ளுடைய தலையில் சூடுங்கள்" என்றான். அந்த விதமாகத்தான் அது இருந்தது.

173 அந்தவிதமான ஓர் ஆவியினால் அவர்கள் தங்களை அலங்கரித்துக்கொள் வார்களாக, ஸ்திரீகள் மட்டுமின்றி ஆண் களும் கூட தங்களை அந்தவிதமான ஓர் ஆவியினால் அலங்கரித்துக்கொள்வார் களாக. அப்பொழுதே நீங்கள் இனிமை யான, போற்றிப்பாராட்டும் வகையில் மணவாட்டியாக மாறிக்கொண்டிருக்கிறீர் கள். எஸ்தர் தன்னுடைய இருதயத்தை சுத்தப்படுத்தியிருந்தாள்.

174 நாமோ அதிகப்படியாக இந்த வெளிப்புற தோற்றத்திற்கே, ஓ, அதிகமான சுருக்கங்களை அகற்ற வேண்டும், *இதை* அதிகம் சரிப்படுத்த வேண்டும், அதை சரிப்படுத்த வேண்டும் என்று அக்கறைக் கொண்டு கவனித்துக் கொள்கிறோம்.

175 இங்கே அண்மையில் டென்னஸி என்ற இடத்தில் உள்ள ஒரு பொருட்காட்சி சாலையில் நின்றேன். அப்பொழுது நான் ஒரு சிறு இடத்தைக் கடந்து சென்றேன். அங்கே ஒரு மானிட சரீரத்தின் கூறுபாடுகள் காட்டப்பட்டிருந்தன. அதில் நூற்று ஐம்பது பவுண்டுகள் எடைகொண்ட ஒரு மனித சரீரத்தில் எண்பத்தி நான்கு செண்டுகள் மதிப்பு கொண்ட இரசாயணப் பொருட்கள் உள்ளன என்று கூறப்பட்டிருந் தது. இப்பொழுது நீங்கள் குறிப்பிடத்தக்க யாராயிருந்தாலும், நீங்கள் எண்பத்தி நான்கு செண்டுகளாயிருக்கவில்லையா? சில ஸ்திரீகள், பெந்தேகோஸ்தே ஸ்திரீகள் ஐநூறு டாலர்கள் பொறுமானமுள்ள

விலையுயர்ந்த மென்மையான முடியினால் உண்டாக்கப்பட்ட மேற்சட்டையை அணிந்து கொண்டு தங்களுடைய தலையை உயர்த்தி மேட்டிமையாய் நடக்கிறார்கள், ஆனால் மழை பெய்தால் அதுவும் நனைந்துபோகுமே. அவர்களிடத்திலும்கூட இருக்கின்ற இரசாயணப் பொருட்கள் வெறும் எண்பத்தி நான்கு செண்டுகளாயிருக்கவில்லையா? அது உண்மையே. அதுதான் உண்மையேயன்றி ஒரு வேடிக்கைக்கூற்று அல்ல. அதுதான் மெய். எண்பத்தி நான்கு செண்டுகள் கிட்டத்தட்ட ஒரு கோழி கூண்டிற்கு சுண்ணாம்படிக்க மட்டுமே போதுமானதாயிருக்கிறது. அவ்வளவு மிகக் குறைந்த அளவு சுண்ணாம்பு முதலியனவே உள்ளன. எனவே எண்பத்தி நான்கு செண்டுகள், அந்த மிகமோசமான இறுதி முடிவினை நீங்கள் கவனித்துப் பாருங்கள்.

176 நீங்கள் ஓர் உணவகத்திற்குச் சென்று... அங்கு நீங்கள் வாங்குகிற ஒரு

பாத்திர சூப் ஆகாரத்தில் ஒரு சிலந்திப்பூச்சி கிடந்தால், அப்பொழுது நீங்கள் அந்த உணவுச்சாலையின் மீது வழக்குத் தொடருவீர்களே.

177 ஆனால் நீங்களோ பிசாசு வலுக்கட்டாயமாக நுழைந்து கிரியை செய்கிற அசுத்தமான தொலைக்காட்சி களின் நிகழ்ச்சிகள் மற்றும் சீட்டாட்ட காரியங்கள் போன்றவற்றை செய்ய துணிகரமாய் அனுமதித்து, அதனை எதிர்க் காமல் ஏற்றுக்கொள்கிறீர்கள்; எனவே அவன் உங்களை அசுத்தமான ஆடைகளை அணியச் செய்கிறான், இந்த ஸ்திரீகளோ தங்களுடைய சரீர உடைகளை அணிந்து கொண்டு, அப்படியே வீதியில் நடந்துச் செல்கிறார்கள். நான் அதை வேடிக்கைக் காக கூறிக்கொண்டிருக்கவில்லை என்பதை என் சகோதரியே, நீங்கள் அறிந்திருக் கிறீர்களா? நீங்கள் என்னைத் தவறாகப் புரிந்துகொள்ளுகிறீர்கள்.

178 கவனியுங்கள். நான் இதைக் கூறிக் கொண்டேயிருக்கிறேன். நீங்கள் அந்த விதமாகவே நடந்து கொண்டால், அப்பொழுது நீங்கள் நியாயத்தீர்ப்பின் நாளிலே ஒரு விபச்சாரி என்றே எண்ணப்படுவீர்கள். உண்மையே. இயேசு, "ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரஞ்செய்தாயிற்று" என்று கூறினார். அந்தப் பாவியானவன் விபச்சாரம் செய் ததற்காக பதில் கூற வேண்டும், அதற்கு காரணம் யார்? நீங்களே. அதற்கு காரணமாயிருந்தது யார்? நீங்கள்தானே. அது உண்மை. நீங்கள், உலகப்பிரகாரமாக இருக்கும்படியாக, உலகத்தாரைப் போன்றே உடுத்திக்கொண்டு புருஷர் களுக்கு முன்னே காணப்படும்படிக்கு நீங்கள் உங்களை அங்கு வெளியே காண்பிக்கிறீர்கள்.

179 நான் அதை ஒரு சமயம் கென்டக்கியில் உள்ள லூயிவில்லில்

இருக்கும் ஒரு ஸ்திரீயிடம் கூறினேன். அப்பொழுது அவளோ, "நல்லது, திரு. பிரான்ஹாம் அவர்களே, இங்கே கவனி யுங்கள். நான் இப்பொழுது உங்களை சரியாகப் புரிந்துகொள்ளச் செய்வேன்" என்றாள்.

அதற்கு நானோ, "சரி, அப்படியா அம்மணி"? என்று கூறினேன்.

அப்பொழுது அவள், "அவர்களோ அந்தவிதமான உடைகளை மாத்திரமே தயாரிக்கிறார்கள்" என்றாள்.

அதற்கு நானோ, "அவர்கள் தையல் இயந்திரங்களையும் தயாரிக்கிறார்கள், மற்றும் துணிகளையும் விற்கிறார்களே" என்றேன்.

180 அது நீங்கள் விரும்புகிறதற்கு காரணமாய் உள்ளது. அப்படியானால் உங்களில் ஏதோக் காரியம் தவறாய் உள்ளது. அது முற்றிலும் உண்மையே. அது ஒரு நாகரீகமாயிருக்கின்ற

காரணத்தால் நீங்கள் அதைச் செய்கிற தில்லை. நீங்கள் இன்றியமையாத காரணத் தால் அதைச் செய்கிறதில்லை. நீங்கள் அதைச் செய்ய விரும்புகிற காரணத்தி னாலேயே அதைச் செய்கிறீர்கள்.

181 நீங்கள் விரும்புகிற காரணத்தாலே புகைக்கிறீர்கள். நீங்கள் அதைச் செய்ய வேண்டியதில்லையே. மோட்டார் வாகனத் தில் செல்லும் ஒவ்வொருவரும் தங்க ளுடைய விரல்களுக்கிடையே சிகரெட்டு களை வைத்துக்கொண்டு செல்வதை நீங்கள் காண்பது போன்று, ஸ்திரீகளும் வீதியில் அவ்வாறு நடந்து செல்வதைக் கண்டதே நான் கண்டதிலேயே மிகவும் அற்பமான அறிவற்ற மடத்தனமான செயல் என்று நான் கருதுகிறேன். ஏன், அது ஓர் அவமானமாயிருக்கிறது. மருத்து வர்களும், மருத்துவ விஞ்ஞானமும் அது முழுமையான புற்றுநோய் மற்றுமுள்ள காரியங்களைக் கூறுகிறபோதும், அவ்வாறு இருப்பதே நாம் இந்தத் தேசத்தில்

பெற்றுள்ள மிகப்பெரிய அசுத்தமான தொடர் பத்திரிக்கையில் வெளியிடுவோரின் செயல் முறையான செய்தியாயுள்ளது. அவர்கள் எல்லா நேரத்திலும் அவைகளை உறிஞ்சிப் புகையை உள்ளிழுத்துக் கொள்கிறார்கள்.

182 ஒரு ஸ்திரீயைப் பாருங்கள், ஒரு கிறிஸ்தவளாய் எண்ணப்பட வேண்டியவள் அங்கே கடற்கரையின்மேல் கலப்புக் குளியலில், ஒரு குளியலாடையோடு நீட்டிப் படுத்துக் கிடக்கிறாள். எனக்கு இரண்டு பெண்பிள்ளைகள் உண்டு. அவர்கள் அதைச் செய்யமாட்டார்கள் என்று நான் கூறவில்லை. அவர்கள் ஒரு சூரிய வெப்பத்தில் சருமத்திற்காக தேக நீராடல் முறையைச் செய்துகொண்டிருப்பதாகக் கூறுகிறார்கள். நான் மட்டும் உயிரோடு இருந்துகொண்டிருந்தால், அப்பொழுது என் பிள்ளைகள் அவ்வாறு செய்தால், அவர்கள் சருமத்தை பதம் பார்க்கும் ஒரு மகனையே கண்டுணர்ந்து

கொள்வார்கள். அது *இந்த* மகனாய்த்தான் இருக்கும். புரிகிறதா? அது கிட்டத்தட்ட *அந்த* அளவு நீளமுள்ள ஒரு பிரம்பினைக் கொண்ட திரு. பிரான்ஹாம் என்ற மகனாய் இருக்கும். அது தவறு என்றே நான் நம்புகிறேன்.

183 அதன்பின்னர் நாமோ நம்மை, “ஓ நாம் ஒரு பெந்தேகோஸ்தே சபை அங்கத் தினர்” என்று அழைத்துக் கொள்கிறோம். ஓ, உங்களுக்கு அவமானமாயிற்றே! உண்மை. பெந்தேகோஸ்தே சபைக்கு அடிநிலக்கிடங்கிலிருந்து அடித்தளம் மற்றும் மேல்மாடித்தளத்தினூடாக ஒரு சுத்திகரிப்பே முன் பகுதியிலிருந்து பின்பாகம் வரைக்கும் தேவையாயிருக் கிறது. அது உண்மை. அதே சமயத்தில் அவை எல்லாவற்றிலும் மிகச் சிறந்ததை நாம் பெற்றுள்ளோம். ஆனால் அது... முடியும்...





# பெண்கள் அவர்கள் வெளியே சென்று உடையுடுத்தும் விதம், அது – அது ஒரு அவமானமாகும்

சகோ.வில்லியம் பிரன்ஹாம்
அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 55-0724 மயக்கியிழுக்கும் ஆவிகள்

---

**பெண்கள் அவர்கள் வெளியே சென்று உடையுடுத்தும் விதம், அது - அது ஒரு அவமானமாகும்.**

42. ''பாவம் அமெரிக்க மக்கள், அவர்கள் தங்களுடைய எல்லா துணி களையும் அயல் நாடுகளுக்கு அனுப்பி விட்டனர்'' என்று சகோதரன் நெவில் கூறின கருத்தை நான் கேட்டேன். அது சரி.

அவர்கள் தங்களுடைய உள்ளாடை களுடன் நடந்து சென்று கொண்டிருக் கின்றனர். அவள்... அதுசரி. அவர்கள் அவைகளை மிஷனரிகளுக்கு கொடுத்து விட்டிருக்கின்றனர் போலும், ஏனெனில் அந்த மிஷனரி, அந்த மக்கள் மற்றும் வேறு நாட்டிலுள்ள அஞ்ஞானிகள் அதை அணிந்திருக்கின்றனர். இந்த மக்களே ஆடைகளில்லாமல் இருக்கின்றனர், அதை

இவர்கள் விரும்புகிறார்கள் என்று தெரிகின்றது.

நான் உங்களுக்கு கூறுகிறேன், ஏதோ ஒன்று தாறுமாறாக்கப்பட்டுள்ளது, அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் போதகமாகும். உங்களை அமிழ்த்துப் போடுபவை பிசாசுகள் தான்.

**வேதாகமத்தில் ஒரு மனிதனைத் தவிர வேறு எவரும் தங்கள் ஆடைகளை தங்கள் சரீரத்திலிருந்து கிழித்து எறியவில்லை, அவன் பிசாசினால் பீடிக்கப்பட்டிருந்த மனிதனாக இருந்தான்.**

இன்றைக்கோ அவன் ஒரு மிருதுவான வடிவில் வருகிறான் - சமுதாயத்திலுள்ள வனாக, நல்லவனாக இருப்பது போல, எல்லாம் சரியானதாக இருப்பது போல.

"சீதோஷ்ணம் குளுமையாக இருக் கின்றது, நீ உன்னுடைய ஆடைகளை சற்று எடுத்து போட்டால் இன்னும் உனக்கு குளுமையாக உணர்வாய்", மனிதன்

முன்னும் பின்னாக முற்றங்களில் அரை நிர்வாணமாக நடக்கிறான் - அதே போன்று பெண்களும்.

நாய்களுக்கு இருக்கின்ற மரியாதையை விட குறைவாக மதிக்கப்படுகின்ற நிலைக்கு ஒருவருக்கொருவர் ஏன் செய் கிறீர்கள். உங்களுக்கு என்ன ஆயிற்று?

நான் உங்களை புண்படுத்த முயல வில்லை. அது பிசாசினால் பீடிக்கப் பட்டிருத்தல் என்று தான் நான் உங்களுக்கு கூற முயற்சிக்கிறேன், மேலும் ''அது சரிதான்'' என்று உங்களுக்கு கூறுகின்ற வஞ்சிக்கின்ற ஆவிகளுக்கு நீங்கள் செவி கொடுக்கிறீர்கள், ஆனால் அது ஒரு பொய்யாகும்.

ஒரு கோதுமை செடியானது கோதுமை யைத் தான் பிறப்பிக்கும். நீ ஒரு கிறிஸ் தவனாக இருந்தால், நீ அதைச் செய்ய மாட்டாய். உன்னால் அதைச் செய்ய

முடியாது. உன்னால் அதைச் செய்யவே முடியாது.



# ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து